1979 நவம்பர் 3]

மதுரை அண்ணா நகர் பகுதியில் கழிவுநீர் அகற்று வசதிகள்.

*வினா எண். 93—திரு. சீ. செல்வராஜ் : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) மதுரை அண்ணா நகர் பகுதியில் குடிசை மாற்று வாரியத்தில் கட்டப்பட்டுள்ள பகுதிகளில் கழிவுநீர் சாக்கடை அமைக்கப்படாததால் கழிவுநீர் தேங்கி சுகாதார சீர்கேடு ஏற்படுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாவை?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) மற்றும் (ஆ) : மதுரை அண்ணா நகர் பகுதியில் குடிசைப் பகுதி மாற்றுத் திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ள பகுதிகளில் கழிவுநீர் சாக்கடை அமைக்கப்பட்டுள்ளது. எனவே கழிவு நீர் தேங்குவதற்கு இடமில்லை.

திரு. சீ. செல்வராஜ் : தலைவரவர்களே, மதுரை அண்ணா நகர் பகுதி மதுரையில் முக்கியமான ஒரு பகுதியாகும். அந்தப் பகுதி வைகை ஆற்றங்கரையில் குடிசைமாற்று வாரியத்தால் கட்டப்பட்டது. அங்கே அடிக்கடி இந்தக் குறை ஏற்படுகிறது. பொதுமக்களிடமிருந்து புகார் வந்துகொண்டிருக்கிறது. அமைச்சரவர்கள் மேலும் அதை சீர்படுத்தி, அந்தப் பகுதி குறையை தீர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன.

(பதில் இல்லை)

செட்டிக்குளம்—லெவிஞ்சிபுரம் குடிநீர்வழங்கு திட்டம்.

*வினா எண். 94—திரு. யா. சை. மு. யூசுப்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம் இராதாபுரம் தொகுதியில் செட்டிகுளம் லெவிஞ்சிபுரம் குடிநீர்த் திட்டத்தில் சேர்க்கப் பட்டுள்ள கிராமங்கள் யாவை?

(ஆ) செட்டிக்குளத்தில் திட்ட ஆய்வு மேற்கொண்டு லெவிஞ்சிபுரத்தில் திட்ட ஆய்வு மேற்கொள்ளாதது அரசுக்குத் தெரியுமா?

(இ) ஆம் எனில் அதற்குக் காரணம் யாது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :

(அ) 1. லெவிஞ்சிபுரம்
2. கண்ணன்குளம்
3. குட்டபுளி
4. செட்டிகுளம்
5. புதுமனை
6. ஸ்ரீரெங்க நாராயணபுரம்
7. பெருமணல்

(ஆ) ஆய்வுப் பணிகள் செட்டிக்குளம் மற்றும் லெவிஞ்சிபுரம் ஆகிய இரு ஊராட்சிகளிலும் இதர 5 சிற்றூர்களிலும் சேர்த்து தான் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

(இ) கேள்விக்கிடமில்லை.

திரு. யா. சை. மு. யூசுப்: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் இங்கே தெரிவித்த பதிலில் இருந்து லெவிஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த அத்தனை ஊர்களையும் சேர்த்துக்கொள்ளவில்லை ; ஒரு சில ஊர்கள் மட்டும் சேர்க்கப்பட்டிருக்கின்றன என்று தெரிகிறது. கடந்த 12 ஆண்டு காலமாக அங்கே இந்தத் திட்டம் செயல்படுத்தப்படவில்லை. அதற்கு ஒவ்வொரு முறையும் ஒரு காரணம் கூறப்படுகிறது. இதற்காக ஒரு இலட்சம் ரூபாய்க்கு பொருட்கள் வாங்கப்பட்டு, இது வரையில் அந்த ரூபாய்க்கு வட்டி கொடுக்க ஊராட்சிகள் வற்புறுத்தப்பட்டு இப்போது அதற்கு வட்டி கொடுக்கமுடியாமல் இருக்கிறது. இப்போது கிராமப்புற குடிநீர்த் திட்டத்தில் சேர்த்து இருக்கிறோம் என்பதால், அத்தனை ஊர்களுக்கும் சுத்தமான தண்ணீர் தேவை இருக்கிறது என்பதால், உடனடியாகத் திட்டத்தை மேற்கொள்ளவும், விடுபட்டுப்போன லெவிஞ்சிபுரம் ஊராட்சி மன்றத்தைச் சேர்ந்த அத்தனை கிராமங்களையும் சேர்த்துக்கொள்ளவும் அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, லெவிஞ்சிபுரம் ஊராட்சியில் உள்ள லெவிஞ்சிபுரம், கண்ணன் குளம், குட்டபுளி ஆகிய ஊர்களும், செட்டிகுளம் ஊராட்சியில் உள்ள செட்டிகுளம், புதுமனை, ஸ்ரீரெங்கநாராயணபுரம், பெருமணல் ஆக மொத்தம் 7 ஊர்களில் உள்ள 11,928 பொது மக்கள் பயன் அடையக் கூடிய வகையில் ஏற்கெனவேஇத்திட்டத்தை நிறைவேற்ற ஆய்வு நடைபெறுகிறது. இந்த திட்டத்தை செயல்படுத்திய பிறகு ஏதாவது சிரமம் இருக்குமேயானால் அதை மறு பரிசீலனை செய்யலாம்.